இலங்கை மத்திய வங்கி

2020 செத்தெம்பர் 30 நிதிக் குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள் 2020இன் 06ஆம் இலக்கம்

---

## திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 34ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளர், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட தற்போதைய சவால்மிக்க சூழ்நிலையினைப் பரிசீலனையில் கொண்டு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுத்த 2012ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரைக்குப் பின்வரும் திருத்தங்களை விடுத்திருக்கின்றார்.

இதன்படி, 2012ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் 1ஆம் பணிப்புரையினைப் பின்வருவன பதிலீடு செய்யும்.

| | |
|---|---|
| 1. உடமையில் வைத்திருக்கும் குறைந்தபட்ச திரவச் சொத்துக்கள் | ஒவ்வொரு உரிமம்பெற்ற குத்தகைக்குவிடல் கம்பனியும் எந்தவொரு நாளிலும் வியாபாரம் முடிவடைகையில், பங்குடமையாளர்கள், பிணைய மயப்படுத்தல்கள் மற்றும் சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட நீண்ட கால (ஓராண்டிற்குக் கூடுதலாக) கடன்பாடுகள் என்பனவற்றிற்கான பொறுப்புக்கள் நீங்கலாக, மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்களில் 5 சதவீதத்திற்குக் குறையாததொரு தொகையினைக் குறைந்தபட்ச திரவச்சொத்தாகப் பேணுதல் வேண்டும். |
| 2. செல்லுபடியாகும் காலம் | தற்போதைய சவால்மிக்க சூழ்நிலையில் திரவத்தன்மை மீதான அழுத்தத்தினை வெற்றி கொள்வதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 31ஆம் நாள் வரையான ஆறு (6) மாத காலப்பகுதிக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும். |

**கே. டி. எஸ். கே. நாணயக்காரா**
பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல்
நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி